# உள்ளூராட்சி நிறுவனத்தின் பணி
# மற்றும்
# அதற்குரிய அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல்

DRAFT

*ஆசியா நிலையம்*

Australian Aid

The Asia Foundation

பிரசுரிக்கப்பட்டது
*ஆசியா நிலையம்*, இலங்கை

முதலாம் பதிப்பு
© 2018, ஆசியா நிலையம்

ISBN :

நூலாசிரியர்
எச். ஜீ. சி. ஜயதிஸ்ஸ

அச்சிடப்பட்டது
கொழும்பு, இலங்கை

இவ் வெளியீடு பற்றி: இவ் வெளியீடு அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் *ஆசியா நிலையம்* மூலம் நடைமுறைப்படுத்தப்படும் உப தேசிய ஆளுகைத் திட்டத்தின் (SNGP) கீழ் உருவாக்கப்பட்ட தொடர் அறிவுசார் படைப்புக்களின் ஒரு பகுதியாகும். உப தேசிய ஆளுகைத் திட்டமானது இலங்கையின் உப தேசிய நிர்வாகத்தை முன்னேற்றுவதற்கான மீளெழுச்சி, பிரஜைகள் உள்ளடக்கமும் பிரதிநிதித்துவமும் மற்றும் பிரச்சினைகளுக்கு நிவாரணமளித்தல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு சோதனை மாதிரிகளின் நிறுவனமயமாக்கல் பற்றிய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அத்துடன் சோதனைச் சீர்திருத்த வழிமுறைகள், செயல்முறைகள், கருவிகள் மற்றும் பிரதான அலுவலர்களின் திறனை கட்டியெழுப்பல் ஊடாக இலங்கையின் உப தேசிய ஆளுகைச் சீர்திருத்தங்களை ஊக்குவிப்பதற்காகவும் செயற்பட்டு வருகின்றது.

பொறுப்புக் கூறல்: இந்த வெளியீட்டில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் யாவும் நூ'லாசிரியரின் கருத்துக்களேயன்றி அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| *ஆசியா நிலையம்* | 4 |
| உப தேசிய ஆளுகைத் திட்டம் | 4 |
| முன்னுரை | 5 |
| உள்ளூராட்சி மன்றமொன்றின் பணி | 6 |
| உள்ளூராட்சி நிறுவனமொன்றின் சட்டரீதியான கட்டமைப்பு எனப்படும் கூட்டமைவு | 9 |
| உள்ளூராட்சி மன்றமொன்று தீர்மானமெடுத்தல் எனப்படும் சபை உடன்படிக்கை | 12 |
| உள்ளூராட்சி மன்றமொன்றுக்கு எழுத்து மூலச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும்? | 13 |
| உள்ளூராட்சி மன்றமொன்று பொதுச் சுகாதாரத்துக்குரிய அதிகாரங்களைச் செயற்படுத்தல் | 13 |
| உள்ளூராட்சி மன்றமொன்று மக்கள் பயன்பாட்டுச் சேவையை நடத்திச் செல்லல் | 16 |
| உள்ளூராட்சி மன்றம் பொது வீதிகள் தொடர்பில் அதிகார பலத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பில் | 19 |
| உள்ளூராட்சி மன்றமொன்று வேறொரு தரப்பினருடன் ஒப்பந்தம் செய்துகொள்வதில் அதிகாரங்களை எவ்வாறு செயற்படுத்த வேண்டும் என்பது தொடர்பில் | 21 |


DRAFT

### *ஆசியா நிலையம்*

ஆசியா *நிலையமானது* ஆசியா வாழ் மக்களின் வாழ்வினையும் ஆசியாவின் அபிவிருத்தியினையும் மேம்படுத்தும் பிரயத்தனத்துடன் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் ஓர் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமாகும். அறுபது ஆண்டுகால அனுபவம் மற்றும் ஆழ்ந்த உள்ளூர் நிபுணத்துவத்துடன் எமது பிராந்தியத்திற்கான பணியானது பின்வரும் 5 மையக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆவையாவன, உள்ளூராட்சியை வலுவாக்கல், மகளிர் வலுவூட்டல், பொருளாதார விரிவாக்கல் வாய்ப்புக்கள், சூழலுக்கேற்ற நெகிழ்வுத்தன்மையை அதிகரித்தல் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை ஊக்குவித்தல்.

சேன். பிரான்சிஸ்கோவை (St. Franscisco) தலைமையகமாகக் கொண்டு 18 ஆசிய நாடுகளிலும் ஆசியா *நிலையமானது* ஒரு வலையமைப்பாகத் தொழிற்படுகிறது. ஆசியா *நிலையமானது* அபிவிருத்தியடைந்த பலதரப்பு மற்றும் இருதரப்பு முகவர்கள், அமைப்புக்கள், நிறுவனங்கள் மற்றும் தனியாட்கள் மூலமாக நன்கொடைகளைப் பெற்று பொதுமக்களுடனும் தனியார் பங்குதாரர்களுடனும் தனது அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. 2017 இல், நாம் 83.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிகழ்ச்சிகளுக்கு நேரடி அனுசரணையாகவும் 8.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை பாடநூல் மற்றும் ஏனைய கல்வி சம்பந்தமான பொருட்களுக்காகவும் வழங்கியுள்ளோம்.

DRAFT

### உப தேசிய ஆளுகைத் திட்டம்

ஆசியா *நிலையத்தின்* உப தேசிய ஆளுகைத்திட்டமானது (SNGP) பொருளாதார வளர்ச்சி மற்றும் செயலாக்கம் வெளிப்படும் இரண்டாம் நிலை நகரங்களின் பொருளாதார மீள்தன்மையினை கட்டியெழுப்புவதற்காக ஆற்றல்மிக்க பொருளாதார மைய எண்ணக்கருத்தின் அடிப்படையில் ஒன்பது *மாகாணங்களினதும்* உள்ளூராட்சி திணைக்களங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நிதி மீள்தன்மை, பிரஜைகள் உள்ளடக்கத்துடன் கூடிய பிரதிநிதித்துவம், மற்றும் பிரச்சினைகள் நிவர்த்திசெய்தல் என்பவற்றிற்கான பரீட்சிக்கப்பட்ட மாதிரிகளை வெற்றிகரமான முறையில் நிறுவனமயமாக்கல் மூலம் உப தேசிய ஆளுகைத்திட்டத்தினை இலங்கையில் மேம்படுத்தலினை முக்கிய நோக்கமாக இத்திட்டம் கொண்டுள்ளது.

# முன்னுரை

உள்ளூராட்சி மன்றமொன்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதியொருவரைப் போன்றே, அதனோடு இணைந்த பணிக்குழுவும் அந் நிறுவனத்தின் தன்மையை இனங்கண்டிருப்பது மிகவும் முக்கியமானது. ஏனெனில், சட்டரீதியான நிறுவனமொன்றில் அலுவல்களை மேற்கொள்ளும் போது அந் நிறுவனம் செய்ய வேண்டியவற்றைப் போன்றே செய்ய முடிந்தவை எழுத்துச் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. அதனை இனங்காணாதிருப்பது உள்ளூராட்சி நிறுவனமொன்றின் மூலம் ஆற்றப்பட வேண்டிய பணி உரிய முறையில் நிகழாதிருப்பதற்கு ஒரு பிரதான காரணமாகும்.

எனவே உள்ளூராட்சி மன்றமொன்றுக்குத் தெரிவுசெய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகளைப் போன்றே நியமிக்கப்படும் பணிக்குழுவின் புரிந்துணர்வுக்காக உள்ளூராட்சி மன்றமொன்றுக்குரிய அடிப்படைய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணியும் அதற்குரிய அதிகாரங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய விதம் பற்றியும் எளிமையான விளக்கமொன்று இதில் உள்ளடங்குகிறது.

DRAFT

## உள்ளூராட்சி மன்றமொன்றின் பணி

உள்ளூராட்சி மன்றம் எனப்படுவது, சட்டரீதியான நிறுவனமாகும். அதாவது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நியதிச் சட்டமொன்றினால் உருவாக்கப்பட்ட நிறுவனமாகும்.

அவ்வாறாயின் உள்ளூராட்சியை மன்றத்தை உருவாக்கிய நியதிச் சட்டம், அவ்வுள்ளூராட்சி மன்றத்துக்குரிய அடிப்படைச் சட்டமாகும்.

அதற்கேற்ப, அனைத்து மாநகரசபைகளும், மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் கீழும், அனைத்து நகரசபைகளும், நகரசபை கட்டளைச் சட்டத்தின் கீழும், அனைத்து பிரதேச சபைகளும் 1987 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழும் நிறுவப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட பிரதேச சபை சட்டத்தின் நீண்ட பெயரின் கீழ் அவ்வாறானதொரு சட்டத்தை நிறைவேற்றும் பாராளுமன்றத்தின் நோக்கம் விபரிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதம் கீழ்க்கண்டவாறு அமையும்.

*'நிருவாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய தீர்மானங்களை எடுக்கும் செயற்பாட்டில் மக்கள் மாகாண மட்டத்தில் பயனுள்ளவாறு பங்குபற்றுவதற்கான அதிக வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன், பிரதேச சபைகள் நிறுவப்படுவதற்காக அச் சபைகளின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் பணிகள் என தீர்மானிப்பதற்காகவும் அதனோடு தொடர்புடைய அல்லது இணைந்த அனைத்து விடயங்களுக்காகவுமான ஏற்பாடுகளைச் செய்வதற்கான ஒரு சட்டமாகும்'*

இவ்வாறானதொரு நோக்கத்திற்காக நியதிச் சட்டங்களின் கீழ் உள்ளூராட்சி மன்றங்கள் எந்தப் பணிகளுக்காக நிறுவப்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்வதும் முக்கியமானதாகும். அதனை நிறுவுகின்ற சட்டத்தில் அதாவது மாநகரசபையொன்று தொடர்பில் மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 4வது உறுப்புரை கீழேயும், நகரசபையொன்று தொடர்பில் நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 4வது உறுப்புரை உறுப்புரையின் கீழும் விபரிக்கப்பட்டுள்ளது.

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 4வது உறுப்புரை:

*'அந்தந்த மாநகரசபைக்குமாக நிறுவப்பட்ட மாநகரசபை, இக் கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்துச் சட்டத்தினால் வேறு ஏதாவது அதிகாரத்துக்கு ஒதுக்கப்பட்ட அல்லது கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ், பொதுச் சுகாதார, பொது இசைவாக்கச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் பற்றிய அனைத்து*

*விடயங்களையும் ஒழுங்குபடுத்தலும், கட்டுப்படுத்தலும், நிருவகிப்பதும், பொதுவாக மக்களின் சௌகரியங்கள், வசதிகள் மற்றும் நலன்புரிய நடவடிக்கைகள் மற்றும் மாநகரத்தின் நலனோம்பு விதிகளைப் பாதுகாப்பதும் மேம்படுத்துவதும் குறிப்பிட்ட மாநகரசபையின் நிருவாக எல்லைக்குட்பட்ட உள்ளூராட்சி நிறுவனத்தின் பொறுப்பாகும்.'*

நகரசபைகள் சட்டளைச் சட்டத்தின் 4வது உறுப்புரை:

*'ஒவ்வொரு நகருக்குமாக நிறுவப்பட்ட நகரசபையானது, இக் கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்துச் சட்டத்தினால் வேறு ஏதேனும் அதிகாரத்துக்கு பிரித்து வழங்கப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களுக்கு கீழாக, நகர மக்கள் சுகாதாரம், மக்கள் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் வீதிகள் பற்றிய விடயங்களை நகர எல்லைக்குள் ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல், நிருவகித்தல் மற்றும் பொது மக்களின் நலனோம்பு வசதிகளை மற்றும் நலன்புரி மறறும் நகரத்தின் சௌகரியங்களுக்காக விதிகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் கையளிக்கப்பட்ட உள்ளூராட்சியின் பணியாக இருத்தல் வேண்டும்.'*

பிரதேச சபைகள் சட்டத்தின் 3வது உறுப்புரை:

*'ஒவ்வொரு பிரதேச சபைகள் மற்றும் பிரதேசங்களுக்காக நிறுவப்பட்ட பிரதேச சபை, அப் பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றமாக வேண்டியதுடன், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகளுக்கு மற்றும் பொது வீதிகளுக்கும் பொதுவாக அப் பிரதேசத்தின் மக்களின் சுகநலன், வசதிகள் மற்றும் நலன்புரி மற்றும் அனைத்து வசதிகளையும் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் உரிய அனைத்து விடயங்களையும் ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிருவாகம் என்பன அதனிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.'*

மேற்குறிப்பிட்ட உறுப்புரைகளின் கீழ், குறிப்பிடப்பட்டுள்ள மாநகரசபைக்கும், நகர சபைக்கும், பிரதேச சபைக்கும் ஒரே பணிதான் நிறுவப்பட்ட சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. எனினும் மாநகரம் ஒன்றுக்காக நிறுவப்பட்ட நகரசபைக்கு அப்பணியை நிறைவேற்றுவதற்கிருப்பதைப் போன்றே அதற்கு மேலதிகமாக வியாபிக்கக் கூடிய அதிகாரங்கள் பிரதேச சபையோடு ஒப்பிடும் போது நகரசபைக்கு விரிவாகக் காணப்படுகின்றன. நகரசபையொன்றையும் பிரதேச சபையொன்றையும் எடுத்தாலும், சமமான பணிகள் காணப்பட்டாலும், அப்பணிகளுக்கு மேலதிகமாகச் செய்ய வேண்டிய செயல்கள் மற்றும் அதற்காக விரிவுபடுத்தக்கூடிய அதிகாரங்கள் தொடர்பிலும் சமமான தன்மையைப் போன்றே, சமனற்ற தன்மையும் காணப்படுகின்றது. எனவே உள்ளூராட்சி மன்றமொன்றைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அதிகாரிகளைப் போன்றே, அதன் நிருவாகத்தில் தொடர்புபடும் உத்தியோகத்தர்களும் தாம்

DRAFT

பிரதிநிதித்துவம் செய்யும் உள்ளூராட்சி மன்றத்தை சட்டரீதியாக இனங்காணுதல் மிகவும் முக்கியமானது.

இவ்வாறு நிறுவப்படும் உள்ளூராட்சி மன்றமொன்றுக்கு நிறுவப்படுவதுடன் ஏற்புடைய மாநகரசபைகள் கட்டளைச் சட்டம், நகரசபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைகள் சட்டம் ஆகிய அடிப்படைச் சட்டத்தின் கீழ், வழங்கப்படும் அதிகாரங்கள் மற்றும் பணிகளுக்கு மேலதிகமான ஏனைய சட்டங்களின் கீழும் அதிகாரங்கள் மற்றும் பணிகள் அளிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அதிகாரங்கள் மற்றும் பணிகள் அளிக்கப்பட்டுள்ள ஏனைய சட்டங்கள் சில கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

01. ஏலதாரர்கள் மற்றும் தரகர்கள் தொடர்பான கட்டளைச் சட்டம்
02. பகிரங்க நாடகக் காட்சிகள் கட்டளைச் சட்டம்
03. தனிமைப்படுத்தல் மட்டும் தொற்றுநோய் தடுப்புக் கட்டளைச் சட்டம்
04. ஸ்பரிசத்தால் பரவும் தொற்றுநோய்கள் பற்றிய கட்டளைச் சட்டம்
05. மயான பூமிகள் மற்றும் அடக்கம் செய்தல் பற்றிய கட்டளைச் சட்டம்
06. கிணறுகள் மற்றும் குழிகள் பற்றிய கட்டளைச் சட்டம்
07. தொல்லைகள் கட்டளைச் சட்டம்
08. களியாட்ட வரி கட்டளைச் சட்டம்
09. வீடு மற்றும் நகர அபிவிருத்திகள் கட்டளைச் சட்டம்
10. வாடிவீட்டுச் சட்டம்
11. பசுவதைக் கட்டளைச் சட்டம்
12. நகர மற்றும் கிராமிய நிர்மாணங்கள் கட்டளைச் சட்டம்
13. காணிகள் கைப்பற்றல் சட்டம்
14. விலங்கு விசர் நோய் கட்டளைச் சட்டம்
15. நாய்களைப் பதிவு செய்யும் கட்டளைச் சட்டம்
16. உணவுச் சட்டம்
17. விலங்குகள் சட்டம்
18. வீதி பங்களிப்புக் கட்டுப்பாட்டுக் கட்டளைச் சட்டம்
19. கழகங்களைப் பதிவு செய்யும் சட்டம்
20. வீதிகளைப் பெயரிடம் மற்றும் தூபிகள் நிர்மாணிப்புக் கட்டுப்பாட்டுச் சட்டம்
21. உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகபூர்வ வீடுகள் (உடமையை மீண்டும் பெற்றுக் கொள்ளும்) சட்டம்
22. அரசாங்கக் காணி உடமையை மீளப்பெறும் சட்டம்
23. உள்ளூராட்சி மன்றங்கள் (மீள் மதிப்பீடு செய்தல் மற்றும் வரியைக் குறைக்கும்) சட்டம்
24. மத்திய சுற்றாடல் அதிகாரசபை சட்டம்
25. வறுமை நிவாரணச் சட்டம்

DRAFT

அவ்வாறாயின் உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றைச் சட்டரீதியாக இனங்காணுகையில் குறிப்பிட்ட பணியொன்றுக்காக சட்டரீதியாக நிறுவப்பட்டு, நிறுவப்பட்ட சட்டத்தினைப் போன்றே அதற்கு மேலதிகமாக ஏனைய பல சட்டங்களினதும் அதிகாரங்கள் மற்றும் பணிகளை வழங்கப்பட்டு சிறப்பான சட்ட ரீதியான அடிப்படையுடன் கூடிய நிறுவனம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## உள்ளூராட்சி நிறுவனமொன்றின் சட்டரீதியான கட்டமைப்பு எனப்படும் கூட்டமைவு

நிறுவப்பட்ட உள்ளூராட்சி மன்றமொன்றின் சட்டரீதியான கட்டமைப்பு எனப்படும் கூட்டமைவு எவ்வாறிருக்கிறது என்பது சட்டரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட வேண்டிய விடயமாகும். பொதுவாக ஏதேனுமொரு பிரதேச சபையொன்றை, நகர சபையொன்றை, மாநகர சபையொன்றை அறிமுகப்படுத்தும் போது அதற்கு பல அர்த்தங்களை வழங்கலாம். எனினும் சட்டரீதியான இனங்காணலின் போது, உள்ளூராட்சி மன்றம் எனப்படுவது அவ்வுள்ளூராட்சி மன்றத்துக்கு மக்கள் வாக்குகள் எனப்படும் இறையாண்மையால் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் மாத்திரமேயாவர். அச்சட்டக் கட்டமைப்பினுள் எந்தவொரு உத்தியோகத்தரும் உள்ளடக்கப்படவில்லை.

அவ்வாறு கருதுகையில் ஏதேனுமொரு உள்ளூராட்சி நிறுவனமொன்றின் கூட்டமைவாக அம் மாநகர சபைக்கு, நகர சபைக்கு, பிரதேச சபைக்கு உள்ளூராட்சி மன்ற வாக்கெடுப்புகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கேற்ப, பிரதிநிதிகளாகும் உறுப்பினர்கள் கருதப்படுவார்கள்.

மேற்குறிப்பிட்ட நிலைமை மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5வது உறுப்புரை, நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5வது உறுப்புரை மற்றும் பிரதேச சபைகள் சட்டத்தின் 4வது உறுப்புரையின் கீழ் தெளிவாகிறது. இவ்வுறுப்புரைகள் முறையே, 2017 இலக்கம் 20ற்கான மாநகரச சபைகள் (திருத்தச்) சட்டம் 2017 இலக்கம் 21க்கான நகர சபைகள் (திருத்தச்) சட்டம் மற்றும் 2017 இலக்கம் 22க்கான பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம் ஊடாக திருத்தப்பட்டுள்ளன.

விளங்கிக் கொள்ள இலகுவானவாறு மாநகர சபைக்கான உரிய உறுப்புரை கீழ்க் கண்டவாறு அமையும். நகரசபைக்கானதும் பிரதேச சபைக்கானதும் தொடர்பிலும் அவ்வாறேயாகும் என்பதை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

மாநகரசபைகளின் கூட்டமைவு:

*‘2(1) (அ) ஒவ்வொரு மாநகரசபையும், அம் மாநகரசபைக்கெனத் தெரிவு செய்து நியமிக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையின் நூற்றுக்கு அறுபத்துக்குச்*

DRAFT

*சமமாகும், (262ம் அதிகாரமான) உள்ளூராட்சி மன்ற வாக்கெடுப்புகள் கட்டளைச் சட்டத்தின் 3 இ மற்றும் ஈ உறுப்புரைகளின் கீழ், வெளியிடப்பட்ட உத்தரவுகளில் உறுதியாகக் காட்டப்பட்டுள்ள தொகுதி எண்ணிக்கையின் அடிப்படையில், அமைச்சரால் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட உத்தரவொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில்,*

*(ஆ) (262ம் அதிகாரமான) உள்ளூராட்சி மன்ற வாக்கெடுப்புகள் கட்டளைச் சட்டத்தின் 65 ஆ உறுப்புரையின் கீழ் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களான, அம் மாநகரசபை தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டிய மற்றும் தெரிவு செய்து அனுப்ப வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கையில் நூற்றுக்கு நாற்பது உறுப்பினர்களுக்கு சமமான எண்ணிக்கையில் மற்றும்,*

*(இ) (262ம் அதிகாரமான) உள்ளூராட்சி மன்ற வாக்கெடுப்புகள் கட்டளைச் சட்டத்தின் 65 ஆ உறுப்புரையின் (4)ம் உப உறுப்புரையின் (அ) பந்தியின் கீழ் ஆணையாளரால் உறுதிப்படுத்தப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.*

*(2) (1)ம் உப உறுப்புரையின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நூற்றுக்கு நாற்பது அடக்கப்பட வேண்டிய எண்ணிக்கை மொத்த எண்ணிக்கை மற்றும் அரை எண்ணிக்கையாகும் சந்தர்ப்பத்தில், அவ் வாசகத்தின் பணிக்காக குறிப்பிட்ட நூற்றுக்கு நாற்பது அடக்கப்படும் எண்ணிக்கையாக, மொத்த எண்ணிக்கை கருதப்பட வேண்டும்.*

இவ்வாறு அடக்கப்படும் மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேச சபைக்கான தலைவரொருவரை நியமிப்பதற்கு மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 14வது உறுப்புரையின் கீழும், நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 19வது உறுப்புரையின் கீழும், பிரதேச சபைகள் சட்டத்தின் 8வது உறுப்புரையின் கீழும் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மாநகரசபையொன்றுக்கு அவர் முதல்வராகும் அதேவேளை, நகரசபை மற்றும் பிரதேச சபையொன்றுக்கு அவர் தவிசாளராவார்.

மாநகரசபையொன்றின் முதல்வருக்கு, நகரசபையொன்றின் அல்லது பிரதேச சபையொன்றின் தவிசாளருக்கு சுகயீனம் அல்லது தவிர்க்க முடியாத காரணமொன்றின் பேரில் தமக்கு சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்த அல்லது பணிகளை நிறைவேற்ற முடியாமற் போகின்ற சந்தர்ப்பத்தில், அவ்வதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அதற்கு மேலதிகமாக நகரமுதல்வர் அல்லது தவிசாளர் வழங்கிய அதிகாரங்கள் இருப்பின் அதனை நடைமுறைப்படுத்துவதற்காக மாநகரசபைக்கான பிரதி முதல்வரொருவரும், நகர சபை மற்றும் பிரதேச சபைக்கு துணைத் தவிசாளர் ஒருவரும் நியமிக்கப்படுவர்.

DRAFT

நகரமுதல்வர் மற்றும் தவிசாளர் தொடர்பில் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் போன்றே அவர்களுக்கு சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள பணிகள் என்ன என்பதை இனங்காண்பதும் முக்கியமானது.

உள்ளூராட்சி மன்றமொன்றுக்கு தெரிவாகும் நகர முதல்வரொருவர், தவிசாளரொருவர், ஏற்புடைய உள்ளூராட்சி மன்றம் எனப்படும் சபையின் தலைவராவதுடன், அதனால் அவர் சபையின் தலைமையை ஏற்பார். மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 254(ஆ) உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ், மாநகரசபையொன்றின் நகர முதல்வர் அம் மாநகரசபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாவார்.

அவ்வாறே, நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 170(அ) உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ், நகரசபையின் தவிசாளர், அந்நகர சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாவார். எனினும் பிரதேச சபையொன்றில் தவிசாளர் பிரதேச சபைகள் சட்டத்தின் எந்தவொரு ஏற்பாட்டுக்கும் கட்டுப்படாமல் பிரதான நிறைவேற்று அதிகாரியாவார்.

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 254(அ) உறுப்புரையில், நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 170 (அ) உறுப்புரையின் அர்த்தம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானங்களை அறவிடுதல் தொடர்பில் மாநகரசபையின் நகர ஆணையாளருக்கு, நகரசபையின் செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ள சட்டரீதியான பொறுப்பு என்பதாகும். பிரதேச சபைகள் தொடர்பில், இதற்குச் சமமான சுயாதீனமான உறுப்புரையொன்று பிரதேச சபைகள் சட்டத்தில் உள்ளடக்கப்படாவிடினும், வருமானங்களை அறவிடுவதோடு ஏற்புடைய அனைத்து உறுப்புரையின் கீழும் அதற்குரிய சட்டரீதியான பொறுப்பு பிரதேச சபையின் செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு மாநகர சபையிலும், நகரசபையிலும், பிரதேச சபையிலும் தனியான நிதியமொன்றுள்ளது. அந்நிதிக்கான கணக்குக் கொடுக்கும் உத்தியோகத்தராக மாநகர சபையொன்றின் முதல்வர் காணப்படுவதுடன், நகரசபையொன்றிலும் பிரதேச சபையொன்றிலும் தவிசாளர் அவ்வாறு காணப்படுவார். அதற்கேற்ப நிதியத்தின் நிதிக் கட்டுப்பாட்டைப் போன்றே நிதி ஒழுக்கம் தொடர்பில் நகரமுதல்வரும், தவிசாளரும் பொறுப்புக்கூர வேண்டும். அவ்வாறே உள்ளூராட்சி மன்றமொன்றின் நகர முதல்வர், தவிசாளரிடம் மாநகரசபைகள் கட்டளைச் சட்டம், நகரசபைகள் கட்டளைச் சட்டம், பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ், குறிப்பிட்டு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் போன்றே, ஏனைய சட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அவரால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறே உள்ளூராட்சி மன்றங்களால் செய்யப்பட வேண்டுமென்று ஏதேனும் எழுத்துச் சட்டத்தினால் உத்தரவிடப்பட்டுள்ள அனைத்துச் செயற்பாடுகளும் சபை சார்பில் நகரமுதல்வரால் தவிசாளரால் நிறைவேற்றப்பட வேண்டும்.

DRAFT

## உள்ளூராட்சி மன்றமொன்று தீர்மானமெடுத்தல் எனப்படும் சபை உடன்படிக்கை

உள்ளூராட்சி மன்றம் சட்டரீதியான மன்றம் என்ற ரீதியில் தீர்மானமொன்றை எடுத்தல் என இலகுவில் அழைக்கப்படும் வகையில் 'சபை உடன்படிக்கை' என்ற சந்தர்ப்பம் சட்டரீதியாக முழுமையடைய வேண்டிய விதம் பற்றிக் கருத்திற் கொள்வது முக்கியமானது.

மாநகரசபையொன்று, நகரசபையொன்று அல்லது பிரதேசசபையொன்று சபை உடன்படிக்கையொன்றுக்கு முன்வரும் விதம் முறையே, மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 21(1), நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 26(1) மற்றும் பிரதேசசபைகள் சட்டத்தின் 14(1) ஆகிய உறுப்புரைகளின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளது.

இவ்வுறுப்புரைகளின் கீழ், ஒரேமாதிரியான விளக்கம் காணப்படுவதுடன், இலகுவாகப் புரிந்து கொள்வதற்காக அதில் ஒரு உறுப்புரையை கருத்திற் கொள்ளலாம்.

பிரதேசசபைகள் சட்டத்தின் 14(1) உப உறுப்புரை

'பிரதேச சபையொன்றினால் தீர்மானிக்கப்பட வேண்டும் என இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்துச் சட்டத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்கள் மற்றும் பிரச்சனைகள் இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடத்தப்படும் பிரதேச சபையின் ஏதேனுமொரு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள சபை உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானிக்கப்பட வேண்டும்.'

மேலே குறிப்பிடுவதற்குப் பயன்பட்ட உறுப்புரைக்கு ஏற்ப, முறையான பிரேரணை உடன்படிக்கையொன்றுக்கான தேவைகள் பூர்த்தியாகும் சந்தர்ப்பத்தில், அப்பிரேரணைகள் உடன்படிக்கைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கும் சட்டரீதியான ஆற்றல் தோன்றும். ஆனால் அடிப்படைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஏற்பாடுகளுக்கு ஏற்ப, சபையால் தீர்மானிக்கப்படுகின்ற மாத்திரத்தில் அதிகாரம் தோன்றாத சந்தர்ப்பங்களும் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பத்தில், மேலதிக தேவைகளும் பூர்த்தியான பின்னர் செயற்படுவதற்குத் தேவையான சட்டரீதியான அதிகாரம் தயாராகும். உதாரணமாக பிரதேச சபைகள் சட்டத்தின் 132 (எ) உப உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப, அவ்வுறுப்புரையின் கீழ்வரும் செலவொன்றைச் செய்வதற்கு சபை தீர்மானித்து, அமைச்சரின் அனுமதி என்ற தேவையும் பூர்த்தியாக வேண்டும். நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 159(1) (ஊ) உறுப்புரைக்குரிய செலவொன்று இடம்பெறும் போது சபையின் தீர்மானத்துக்கு மேலதிகமாக அமைச்சரின் அனுமதி ஏற்புடையதாகும். அவ்வாறே, மாநகரசபைகள் கட்டளைச்

DRAFT

சட்டத்தின் 188(1) (எ) உறுப்புரைக்க ஏற்புடையதான செலவும் அவ்வாறே சபை அனுமதிக்கு மேலதிகமாக அமைச்சரின் அனுமதியும் ஏற்புடையதாகும்.

இங்கு அமைச்சர் எனப்படுபவர். 1989 இலக்கம் 12க்கான உள்ளூராட்சி சபைகள் (விளைவு ஏற்பாடுகள்) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுடனும் கருதுகையில் உரிய உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராவார்.
இவ்விதமாக உள்ளூராட்சி மன்றத்தால் தனக்கேயுரித்தான அதிகாரங்களின் கீழ் தீர்மானிக்க வேண்டிய விடயங்களை சபை உடன்படிக்கையொன்றின் மூலம் தீர்மானித்து வழங்கிய பின்னர் நிருவாகத்திற்கு அதனை செயற்படுத்தும் அடிப்படைச் சட்டத் தேவைகள் பூர்த்தியாகலாம்.

## உள்ளூராட்சி மன்றமொன்றுக்கு எழுத்து மூலச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும்?

சட்டத்தினால் நிறுவப்பட்ட உள்ளூராட்சி சபையொன்றுக்கு எழுத்து மூலச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் நடைமுறையில் இருக்கும் போது, சட்டரீதியான நிறுவனம் என்ற ரீதியில், அதற்குரிய தனித்துவம் தொடர்பில் கருத்திற் கொள்வதும் முக்கியமானது. உள்ளூராட்சி நிறுவனம் சட்டரீதியான நிறுவனம் என்பதைக் காரணமாகக் கொண்டு, சட்டரீதியான ஆளுமையைப் போன்றே தொடர்ச்சியான நிலைப்பாடு, பொது சபையொன்றின் மூலம் பிரதிநிதித்துவம் செய்யக்கூடியதாகவிருத்தல், மற்றும் உள்ளூராட்சி மன்றத்தின் பெயரில் வழக்குத் தாக்கல் செய்யக் கூடியதாகவிருத்தல் போன்ற தனித்தன்மைகள் உள்ளன.

அவ்வாறே, உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளுக்குரிய பிரதான மூன்று துறைகளான பொதுச் சுகாதாரம், பயன்பாட்டுச் சேவை, மற்றும் பொது வீதிகள், ஆகிய விடயங்கள் தொடர்பில் அப்பணிகளை நிறைவேற்றுவதில் அடிப்படைச் சட்டத்தின் கீழ் அதிகாரங்களை வழங்குவதற்கு அளிக்கப்பட்டுள்ள விதத்தை ஆராய்ந்தறிவதும் முக்கியமானது.

## உள்ளூராட்சி மன்றமொன்று பொதுச் சுகாதாரத்துக்குரிய அதிகாரங்களைச் செயற்படுத்தல்

மாநகரசபைக்குரிய பொதுச் சுகாதாரம் பற்றிய அதிகாரங்களைச் செயற்படுத்துகையில், மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 96ம் உறுப்புரையில் உள்ள குறிப்பு முக்கியமானது.

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 96வது உறுப்புரை



DRAFT

‘ஒவ்வொரு மாநகரத்திலும் மாநகரசபையிடம் ஒரு அதிகாரியிடம் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களினதும் பொறுப்புகளினதும் கீழ், அம் மாநகரசபையின் பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் பணிகளுக்கான பொது நிருவாக அதிகாரசபையாக இருக்க வேண்டியதுடன், இக்கட்டளைச் சட்டத்தின் துன்புறுத்தல்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின், வீடு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் மற்றும் அது தொடர்பில் தற்காலத்தில் காணப்படும் ஏதேனும் எழுத்துமூலச் சட்டத்தால் அதற்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் அப்பணிக்காக செயற்படுத்தும் உரிமை அச்சபைக்கு இருத்தல் வேண்டும்.’

அவ்வாறே, நகரசபைக்கு ஏற்புடையதான நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 103வது உறுப்புரையைப் போன்றே பிரதேச சபைகள் சட்டத்தின் 78வது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டிருப்பதும் அதனோடு ஒத்ததாகும்.

நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 103வது உறுப்புரை

‘ஒவ்வொரு நகரத்திலும் நகரசபையிடம் ஒரு அதிகாரியிடம் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களினதும் பொறுப்புகளினதும் கீழ், அம் நகரசபையின் பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் பணிகளுக்கான பொது நிருவாக அதிகாரசபையாக இருக்க வேண்டியதுடன், இக்கட்டளைச் சட்டத்தின் தொல்லைகள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின், வீடு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் மற்றும் அது தொடர்பில் தற்காலத்தில் காணப்படும் ஏதேனும் எழுத்துமூலச் சட்டத்தால் அதற்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் அப்பணிக்காக செயற்படுத்தும் உரிமை அதற்காக அச்சபைக்கு இருத்தல் வேண்டும்.’

பிரதேச சபைகள் சட்டத்தின் 78வது உறுப்புரை

‘(1) வேறேதேனும் அதிகாரசபைக்கு சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளின் கீழ், ஒவ்வொரு பிரதேச சபைகள் பிரதேசத்திலும் பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் பணிகளுக்கான பொது நிருவாக அதிகாரசபையாக இருக்க வேண்டியதுடன், இக்கட்டளைச் சட்டத்தின் துன்புறுத்தல்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின், வீடு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் மற்றும் அது தொடர்பில் தற்காலத்தில் காணப்படும் ஏதேனும் எழுத்துமூலச் சட்டத்தால் அதற்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் அப்பணிக்காக செயற்படுத்தும் உரிமை அச்சபைக்கு இருத்தல் வேண்டும்.’

DRAFT

‘(2) இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட, அளிக்கப்பட்ட அல்லது உத்தரவிடப்பட்ட பொதுச் சுகாதாரத்துக்குரிய விடயங்கள் தொடர்பிலான அதிகாரங்கள், பணிகள் மற்றும் பணிப்பொறுப்புகளை நிறைவேற்றும் போது, அப் பிரதேச சபை, அதன் எல்லையிலான சுகாதார வைத்திய உத்தியோகத்தரை விசாரித்து செயற்பட வேண்டும். அவ்வாறு அனைத்து விடயங்கள் தொடர்பிலும் பிரதேச சபைக்கு ஆலோசனை வழங்குவதும் பொதுச் சுகாதாரத்துக்குரிய நடவடிக்கைகளை அப்பிரதேசத்தில் நடத்திச் செல்லுதல், ஆணையிடுதல் மற்றும் மேற்பார்வையும் அச் சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.’

மேற்படி உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஏதேனுமொரு உள்ளூராட்சி நிறுவனமொன்று அதன் உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசத்துக்குரிய பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் பணிக்கான பொது நிருவாக அதிகாரசபையாக இருத்தல் வேண்டும்.

இவ்வாறு உள்ளூராட்சி மன்றம் பொதுச் சுகாதார அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் பொது அதிகாரசபையாக இருக்கின்ற போது அவ்வாறு செயற்படுவதற்கான அதிகாரம் அடிப்படைச் சட்டமான மாநகரசபைகள் கட்டளைச் சட்டம், பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் மாத்திரமன்றி, ஏனைய பல சட்டங்களின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது. விலங்கு விசர் நோய் கட்டளைச் சட்டம், தொற்றுநோய் கட்டளைச் சட்டம், அழுத்தச் செயற்பாடுகள் கட்டளைச் சட்டம் என்பனவற்றை அதற்கு உதாரணமாகக் காட்டலாம். ( இதற்கு முன்னர் உள்ளூராட்சிக்குரிய ஏனைய சட்டங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டங்களுக்கிடையே பெரும்பாலானவை பொதுச் சுகாதாரத்துக்குரிய சட்டங்களாகும்)

அவ்வாறே, உள்ளூராட்சி மன்றமொன்றில் பொதுச் சுகாதாரத்துக்குரிய மிக முக்கியமான துறையொன்று உணவுச் சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளது. அதில் உணவுச் சட்டத்தின் பணிக்காக உணவு அதிகாரம் மாநகரசபை அதிகாரப் பிரதேசத்திற்கு ஏற்புடைய மாநகரசபையிடம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய மாகாணங்கள் நிருவாக நிறுவனங்கள் தொடர்பிலும் அதாவது நகரசபை, பிரதேச சபையை உணவு அதிகாரசபையாக நியமிக்கலாம். குறிப்பாகப் பொதுச் சுகாதாரத்துடன் இணைந்து மலம் கொண்டுசெல்லல், கழிவுப் பொருள் முகாமைத்துவம், பொது மலசல கூடங்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் அடிப்படைச் சட்டத்தின் கீழுள்ளதைப் போன்று துணைச் சட்டங்களின் கீழும், அதாவது இடைக்காலச் சட்டங்களின் கீழும் போதுமான அதிகாரங்களுக்குள் உள்ளூராட்சி மன்றமொன்று செயற்படும் ஆற்றல் கிடைத்துள்ளது. உள்ளூராட்சி நிறுவனமொன்றுக்கு இடைக்காலச் சட்டங்களை விதித்துக் கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கருத்திற் கொள்ளும் போது அதிலுள்ள பாரிய

DRAFT

இடைவெளியில் பொதுச் சுகாதாரத்துக்குரிய அதிகாரங்களே பரந்தளவில் காணப்படுகின்றன.

குறிப்பாக பொதுச் சுகாதாரத்திற்கு தீங்கிழைக்கும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு தண்டனை ஏற்பாடுகள் மாநகரசபைகள் கட்டளைச் சட்டம், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ், உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனூடாக பொதுச் சுகாதாரத்தை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கான மிகச் சிறந்த ஆற்றல் கிடைத்துள்ளது.

## உள்ளூராட்சி மன்றமொன்று மக்கள் பயன்பாட்டுச் சேவையை நடத்திச் செல்லல்

உள்ளூராட்சி மன்றமொன்றுக்குரிய பணியின் கீழ் மக்கள் பயன்பாட்டுச் சேவையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப, உள்ளூராட்சி மன்றமொன்று செய்யக் கூடிய மக்கள் பயன்பாட்டுச் சேவைகள் எவையென்பதும் அடிப்படைச் சட்டத்தில் அதாவது மாநகரசபைகள் கட்டளைச் சட்ட, நகரசபைகள் கட்டளைச் சட்ட, பிரதேச சபைகள் சட்ட, ஏற்பாடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 40(i) (j) தொடர் உறுப்புரையில் விளக்கப்பட்டள்ளவாறு மாநகரசபையொன்று நடத்திச் செல்லக்கூடிய பயன்பாட்டுச் சேவைகள் கீழ்வருமாறு அமையும்.

1. நீர்வழங்கல்
2. வீதிகள், பொது இடங்கள் மற்றும் பொதுக் கட்டிடங்களை ஒளிமயமாக்கல்
3. மின்னொளி, அல்லது மின்சக்தியை வழங்குதல்
4. வியாபாரச் சந்தைகள்
5. பொதுவான குளிக்குமிடங்கள், சலவை செய்யும் இடங்கள், விலங்குகளைக் குளிப்பாட்டும் இடங்கள்
6. உரிய சேவையை உருவாக்குதல் மற்றும் நடத்திச் செல்லுதல் பற்றிய வேறு ஏதேனும் சட்டத்தினால் செய்யப்பட்டுள்ள தடைகள் மற்றும் மட்டுப்படுத்தல்களின் கீழ், வேறு ஏதேனுமொரு வகையிலான பொதுச் சேவை.

அவ்வாறே நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 129வது உறுப்புரையின் கீழ் நகரசபை நடத்திச் செல்லக்கூடிய பயன்பாட்டுச் சேவைகள் விபரிக்கப்பட்டுள்ளன.

DRAFT

129. நகரமொன்றின் நகரசபையால் தனியாக அல்லது வேறு ஏதேனும் உள்ளூராட்சி மன்றத்துடன் இணைந்து மற்றும் (அரசாங்கத்தின் உதவியுடன் அல்லது இல்லாமல்) நேரடியாக அல்லது ஏதேனுமொரு அனுசரணையாளர் அல்லது அனுசரணைச் சபையினூடாக அந் நகரத்தில் ஓரிடத்தில் அல்லது ஒரு பிரதேசத்திற்கான பணிக்காக அவ்விடத்தில் அல்லது அப்பிரதேசத்தில் வாழும் அல்லது நடமாடும் நபர்களின் நன்மைக்காக கீழ்வரும் மக்கள் உதவிச் சேவைகளிடையே ஏதேனுமொரு சேவையை அமைத்து நடத்திச் செல்லலாம்.

(அ) நீர்வழங்கல்

(ஆ) வீதிகள், பொது இடங்கள் மற்றும் பொதுக் கட்டிடங்களை ஒளிமயமாக்கல்

(இ) மின்னொளி, அல்லது மின்சக்தியை வழங்குதல்

(ஈ) வியாபாரச் சந்தைகள்

(உ) பொதுவான குளிக்கும் வீடுகள் மற்றும் குளிக்குமிடங்கள்

(ஊ) மலசலகூடங்களுக்கான மலசலகூடப் பலகைகளைத் தயாரித்து செலவின விலையில் வழங்குதல்

(எ) வறிய வகுப்பினருக்கு வீட்டு வசதிகளை வழங்குதல்

(ஏ) அமைத்தல் மற்றும் நடத்திச் செல்வது தொடர்பில் வேறு வகையிலான பொதுச் சேவை.

பொதுப் பயன்பாடுகளுக்குக் கீழ்வரும் வேறுபாட்டெல்லை பிரதேச சபைகள் சட்டத்தின் 108ம் உறுப்புரையின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளது.

‘பிரதேச சபையால் சுயாதீனமாக அல்லது வேறு உள்ளூராட்சி நிறுவனமொன்றில் அல்லது ஒரு நபருடன் இணைந்து அப் பிரதேசத்தில் வாழும் அல்லது அங்கு வசிப்பதற்குச் செல்லும் நபர்களின் நன்மைக்காக கீழ்வரும் பொதுப் பயன்பாட்டுச் சேவைகளிடையே ஏதேனுமொரு சேவையை அமைத்து நடத்திச் செல்லலாம்.

(அ) நீர்வழங்கல்

(ஆ) வீதிகள், பொது இடங்கள் மற்றும் பொதுக் கட்டிடங்களை ஒளிமயமாக்கல்

(ஈ) மின்னொளி, அல்லது மின்சக்தியை வழங்குதல்

(ஈ) வியாபாரச் சந்தைகள்

(உ) வாடிவீடுகள்

(ஊ) பொதுக் குளிக்குமிடங்கள் மற்றும் குளிக்குமிடங்கள்.

(எ) மலசலகூடங்களுக்கான மலசலகூடப் பலகைகளைத் தயாரித்து செலவின விலையில் வழங்குதல்.

(ஏ) வறிய வகுப்பினருக்கு வீட்டு வசதிகளை வழங்குதல்

(ஐ) அமைப்பதற்கு நடத்திச் செல்வதற்கு அல்லது திட்டமிடுவதற்கு இச்சட்டத்தில் வேறு ஏதேனுமொரு ஏற்பாட்டினால் அல்லது வேறேதேனும் எழுத்துமூலச் சட்டத்தின் கீழ் அதிகாரம் கிடைத்துள்ள வேறேதும் வகையிலான பொதுச் சேவை.'

இவ்வாறு, உள்ளூராட்சி மன்றமொன்று நடத்திச் செல்லக்கூடிய பயன்பாட்டுச் சேவைகள் சட்டத்தினால் உறுதியாகக் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறு காட்டப்பட்டுள்ள சேவைகளிடையே குறிப்பாக மின்சக்தி வழங்கல், நீர்வழங்கல் ஆகிய சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மின்சார சபை, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன எடுக்கும். எனினும் உள்ளூராட்சி மன்றமொன்றினால் நிறைவேற்றப்படக்கூடாது என்ற சேவைகளின் கீழ் வரும் நிலைமை அதனூடாக இடம்பெறவில்லை.

எவ்வாறாயினும் மேலே விபரிக்கப்பட்ட பல சேவைகள் மாநகர சபைக்கும், நகரசபைக்கும், பிரதேச சபைக்குமான பொதுச் சேவைகளாகும். பொதுச் சேவைகளைச் சரியாக விபரிக்கப்பட்டதன் பின்னர், எழுத்துமூலச் சட்டமொன்றினால் அனுமதி வழங்கும் வேறு எந்தவகையான சேவையைச் செய்வதற்கும் உள்ளூராட்சி மன்றமொன்றுக்கு மேற்குறிப்பிட்ட உறுப்புரைகளின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பொருள் என்ன என்பதை இங்கு கவனத்திற் கொள்வது முக்கியமாகும்.

'எழுத்துமூலச் சட்டம்' என்பதை பொருள்கோடல் செய்யும்போது, இடைக்காலச் சட்டமும் அதில் உள்ளடங்கும். அடிப்படைச் சட்டங்களின் கீழ், பெயரிடப்பட்ட சேவைகளுக்கு மேலதிகமாக உள்ளூராட்சி மன்றமொன்றுக்குரிய இடைக்காலச் சட்டங்களின் ஊடாக சில சேவைகைளை எழுத்துமூலச் சட்டத்திற்கேற்றவாறு அமைத்துக் கொள்ள முடிந்தால், அச் சேவையும் உள்ளூராட்சி மன்றத்தால் நடைமுறைப்படுத்தப்படக் கூடிய பயன்பாட்டுச் சேவையாக அமையலாம்.

இவ்வாறு உள்ளூராட்சி மன்றமொன்றின் கீழ் மேற்கொள்ளப்படக்கூடிய பயன்பாட்டுச் சேவைகளை விரிவுபடுத்திக் கொள்ளக்கூட உள்ளூராட்சி மன்றத்துக்கு சட்டரீதியான ஆற்றல் உள்ளதுடன் அதனூடாக சேவைகளின் வியாபிப்பைப் போன்றே வருமான அதிகரிப்பிற்கும் அது காரணமாக அமையலாம்.

## உள்ளூராட்சி மன்றம் பொது வீதிகள் தொடர்பில் அதிகார பலத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பில்

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 47வது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாநகரசபை அதிகாரப் பிரதேசத்தினுள், அமைந்துள்ள வீதிகள் தொடர்பிலான அதிகார பலம் மாநகரசபைக்கு உரியதாகும்.

அவ்வாறு அதிகாரமொன்று உரித்தாகும் வீதியானது, மக்களுக்கான பாதை உரிமையுள்ள அரசாங்க அல்லது தனியார் சொத்து அல்லாத பாதை எனக் கருதப்படும்.

நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 44 மற்றும் 46ம் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப, வேறேதும் அதிகாரமொன்றுக்கு சட்டத்தால் அளிக்கப்பட்டிருக்கும் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களின் கீழ் மற்றும் வேறு சாசனங்களின் ஊடாக அத்தருணத்திலும் பிறருடைமையல்லாத நகரசபை நிருவாக எல்லைக்குள்ளிருக்கும் பிரதான வீதிகள் அல்லாத அனைத்து வீதிகள் தொடர்பிலும் பொது அதிகார பலம் நகரசபையைச் சாரும்.

பிரதேச சபைகள் சட்டத்தின் 21ம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப வேறு ஏதேனும் அதிகாரசபையொன்றினால் சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகள் மற்றும் அதிகார பலங்களின் கீழ் பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் பிரதான வீதிகள் அல்லாத அனைத்து வீதிகள் தொடர்பில் சட்டத்தால் அளிக்கப்படவுள்ள அதிகாரங்களின் கீழ், அதிகார பலம் பிரதேச சபையைச் சாரும்.

பாதைகள் பிரதானமாக இரு பிரிவுகளாகும். அதாவது பொது வீதிகள் மற்றும் தனியார் வீதிகள் என்ற ரீதியில் அமையும். மக்களிடையே எந்தவொரு நபரும் பயணிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ள வீதியொன்று பொது வீதியாகின்ற அதேவேளை, ஒரு நபருக்கோ அல்லது சில நபர்களுக்கோ உள்செல்லும் உரிமை அல்லது பூமியின் உரிமையுள்ள பாதைகள் தனியார் வீதிகளாகும்.

மாநகரசபையொன்று, நகரசபையொன்று பொது வீதிகளைப் பிரகடனப்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகள் சட்டத்தில் விபரிக்கப்படாவிடினும், உரிய பாதை, வீதியை பௌதீக ரீதியில் இனங்காண்பது, அளப்பது, எல்லைகளை வகுப்பது, எதிர்ப்புகளைக் கருத்திற் கொள்வது போன்ற படிமுறைகளைப் பின்பற்றுவது முக்கியம்.

பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள உள்ளூராட்சி மன்ற அதிகார பலத்துக்குள் எடுக்கக் கூடிய வீதியொன்றை, பாதையை பிரகடனப்படுத்தும் செயற்பாட்டில் கீழ்வரும் விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

DRAFT

- பிரகடனப்படுத்தலுக்கு உட்படும் பாதை தனியார் பாதையா, பொது வீதியா என்பதை ஆராய்ந்ததன் பின்னர் அது பொது வீதி என்பதை உறுதிசெய்து கொள்ள முடியும்.
- அப்பொது வீதி காணப்படும் விதத்தை அளந்து எல்லைக்கல் இடுதல்.
- உரிய வீதி காணப்படும் விதத்தில் திட்டவரைபடங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
- உரிய வீதியைப் பிரகடனப்படுத்துவது தொடர்பில் நிகழ்காலத்தில் நடவடிக்கையாற்றுவதற்காக பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (1) உறுப்புரைக்கேற்றவாறு மாகாணத்தின் மாகாணசபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- உரிய வீதி பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும்.
- முதல்முறை பிரகடனம் இடம்பெற்று 3 மாதங்கள் கடந்த பின்னர் 6 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் பிரதேச சபைகள் சட்டத்தின் 24(2) உறுப்புரைக்கேற்றவாறு எதிர்ப்புகள் ரீதியில் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாத வீதிகள் தொடர்பில் இரண்டாவது பிரகடனத்தை மேற்கொள்ளல்.

உள்ளூராட்சி மன்றத்துக்கு உரிமையுள்ள வீதிகள் தொடர்பில் வீதி ரேகை விதிப்பிற்காக நடவடிக்கை எடுக்க முடிவதுடன், அதற்கான உத்தரவுகளை மேற்கொள்ளும் அதிகாரம் வீடு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குக் கீழ்ப்படிந்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய வீதிகள் தொடர்பில் 1980 38ம் இலக்க வீடு மற்றும் நகர அபிவிருத்தி திருத்தச் சட்டத்தின் ஊடாகத் திருத்தப்பட்ட 1925 19ம் இலக்க வீடு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 8வது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும்.

அவ்வாறே தேசிய அரசசபையின் 1978 41ம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3வது அட்டவணையில் 16வது உத்தரவு (அ) மற்றும் (ஆ), 14 உத்தரவு (இ) மற்றும் 19 உத்தரவு (ஈ) பந்திகளுக்கு ஏற்ப, உள்ளூராட்சி மன்றத்தின் வசமுள்ளது என பிரகடனப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றம் வசமுள்ள அனைத்து வீதிகளும் தொடர்பில் வீதி ரேகைகளை நிர்ணயித்தல் வேண்டும்.

DRAFT

அவ்வாறே தனியார் வீதியொன்று உள்ளூராட்சி மன்றமொன்றின் வசமுள்ள வீதியாகக் கருதப்படுவதற்கு உரிய சொத்தை பரிசாக அளிப்பதற்கோ காணிகள் கைப்பற்றப்படும் சட்டத்தின் கீழ் காணிகளை கைப்பற்றிக் கொள்ளவோ முடியும்.

உள்ளூராட்சி மன்றங்கள் வீதிகளைப் பெயரிடுதல் தொடர்பில் மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 71(1) உறுப்புரையின் ஏற்பாடுகள், நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 55(ஆ) உறுப்புரையின் ஏற்பாடுகள், பிரதேச சபைச் சட்டத்தின் 198ம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாக அமையும்.

## உள்ளூராட்சி மன்றமொன்று வேறொரு தரப்பினருடன் ஒப்பந்தம் செய்துகொள்வதில் அதிகாரங்களை எவ்வாறு செயற்படுத்த வேண்டும் என்பது தொடர்பில்

உள்ளூராட்சி மன்றமொன்றுக்கு ஏற்புடைய பணி தொடர்பில் மேலே விபரிக்கப்பட்ட அதிகாரங்கள் தவிர்ந்த மாநகரசபையொன்று மாநகர கட்டளைச் சட்டத்தின் 34வது உறுப்புரையிலிருந்து 40வது உறுப்புரை வரையிலும், நகரசபையொன்று 36ம் உறுப்புரையிலிருந்து 43ம் உறுப்புரை வரையிலும், பிரதேச சபையொன்று 16ம் உறுப்புரையிலிருந்து 19ம் உறுப்புரை வரையான ஏற்பாடுகளின் கீழ் பரந்துள்ள அதிகாரங்களைச் செயற்படுத்தி இன்னொரு தரப்பினருடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியும்.

குறிப்பாக உள்ளூராட்சி மன்றமொன்றில் ஒப்பந்தம் மேற்கொள்ளும் அதிகாரங்கள் சார்பில் மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 228 மற்றும் 229ம் உறுப்புரைகளும், நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 38வது உறுப்புரையும் பிரதேச சபைகள் சட்டத்தின் 173 மற்றும் 174ம் உறுப்புரைகளின் கீழுள்ள ஏற்பாடுகளும் ஏற்புடையதாகக் காணப்படுகின்றன.

ஆனால் மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளுடன் அசையாத சொத்துக்களை நோக்காகக் கொண்டு ஒப்பந்தம் செய்கையில் மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 40(1) (ஊ) தொடர் உறுப்புரையின ஏற்பாடுகளும் நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 36 (உ) உப உறுப்புரையின் ஏற்பாடுகளும், பிரதேச சபைகள் சட்டத்தின் 19 (1) (ஓ)இ 19 (1) (xi) மற்றும் 19 (1) (xii) ஏற்பாடுகளும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

அவ்வாறே உள்ளூராட்சி மன்றமொன்று ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான அதிகாரத்தைத் தயாரித்துக் கொள்வதற்கு மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 21(1) உப உறுப்புரை, நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 26(1) உப உறுப்புரை, பிரதேசசபைகள் சட்டத்தின் 14(1) உப உறுப்புரையின் கீழ், ‘சபை’ தீர்மானமொன்றை எடுத்தல் வேண்டும்.

உள்ளூராட்சி மன்றமொன்று, தமக்குரிய காணிகள் பற்றிய அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குரிய ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் போது, மேலே குறிப்பிட்ட ஏற்பாடுகள் மீது அவதானம் செலுத்த வேண்டும். அவ்வாறே உள்ளூராட்சி மன்றமொன்று, சொத்தொன்றை வைத்திருப்பதற்கு, விற்பதற்கு மற்றும் குத்தகைக்க விடுவதற்கு அல்லது வேறுவிதமாக அகற்றிவிட நடவடிக்கை எடுக்க முடியும்.

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 36(2) உறுப்புரையின் ஏற்பாடுகள், நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 33(2) உறுப்புரையின் ஏற்பாடுகள் மற்றும் 1987 இலக்கம் 15க்கான பிரதேச சபைகள் சட்டத்தின் 17(3) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப, மாநகரசபை, நகரசபை, மற்றும் பிரதேச சபையொன்று, தொடர்பில் சபை வசமாக்கப்பட்ட சொத்துகள் நிருவகிக்கப்பட வேண்டியதுடன், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்காக உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறே,

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(2) (உ) உப உறுப்புரை, நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 158 (2) (ஊ) உப உறுப்புரை மற்றும் 1987 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 192 (2) (எ) உப உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப, உள்ளூராட்சி மன்றங்களின் வசமுள்ள சொத்துக்களை நிருவகிக்கும் போது திரண்ட அனைத்து வருமானமும் உள்ளூராட்சி மன்ற பொது நிதியத்தில் வரவு வைக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள் வசமுள்ள சொத்துகளை நிர்வகிக்கையில், மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 267ம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள், நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 153ம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் 1987 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126ம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப, உள்ளூராட்சி மன்றத்தால் இடைக்கால சட்டங்களைப் பிறப்பித்துக் கொள்ள முடியும்.

உள்ளூராட்சி மன்றம் இடைக்காலச் சட்டம் பிறப்பித்தல் தொடர்பில் அதிகாரங்களைச் செயற்படுத்துதல்.

இடைக்காலச் சட்டங்கள் எனப்படும் இடைக்காலச் சட்டம் முன்னர் குறிப்பிட்டவாறு சட்டத்தால் உள்ளூராட்சி மன்றங்களுக்குள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப, உள்ளூராட்சி மன்றங்களால் தயாரிக்கப்படும் அல்லது ஏற்றுக் கொள்ளப்படும் இணைச் சட்டங்களாகும்.

உள்ளூராட்சி நிறுவனத்துக்கு இடைக்காலச் சட்டங்களைத் தயாரித்துக் கொள்வதற்கான அதிகாரம் கிடைக்கும் பிரதான சட்டங்களாக மாநகரசபைகள்

DRAFT

கட்டளைச் சட்டம், நகரசபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைகள் சட்டம் என்பவற்றைக் குறிப்பிடலாம். எனினும், அது தவிரவும் ஏனைய பிரதான சட்டங்கள் பலவற்றின் ஊடாகவும், உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடைக்காலச் சட்டங்களைப் பிறப்பித்துக் கொள்ளும் சட்டரீதியான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 267(1) உறுப்புரையின் கீழ், மாநகரசபையாலும், நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 153வது உறுப்புரையின் கீழும், நகர சபையாலும், பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1)ம் உறுப்புரையின் கீழ், பிரதேச சபையனாலும், இடைக்காலச் சட்டங்கள் பிறப்பிக்கப்படலாம்.

மேலும், 1952 06ம் இலக்க உள்ளூராட்சி மன்றங்கள் (நிறைவேற்றப்பட்ட இடைக்காலச் சட்டங்கள்) சட்டத்தின் 2வது உறுப்புரைக்கு ஏற்ப, உள்ளூராட்சி அமைச்சரால் கொண்டுசெல்லப்பட்ட இடைக்கால சட்டங்களை உள்ளூராட்சி மன்றம் தழுவிக்கொள்வதற்கான அதிகாரம் உண்டு.

மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கேற்ப, உள்ளூராட்சி மன்றம் எனப்படுவது மிகச் சிறப்பாக எழுத்துமூலச் சட்டம் ஏற்புடையதான பிரதேச நிருவாக நிறுவனம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வெண்டும்.

DRAFT